ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1487/7 - 2007 මාර්තු 05 වැනි සඳුදා - 2007.03.05

*1487/7 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 212 ஆம் பிரிவின்கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய,*
*பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2007, மாச்சு 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 17(2) (ஆ) பிரிவின் நோக்கங்களுக்காக கம்பனியொன்று தொடர்பில் "குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது அத்தகைய கம்பனியினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்பு முயற்சியொன்று என்பதுடன் -

   (அ) இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் பெயர் குறிக்கப்பட்ட கருத்திட்டமொன்றில் -

   (ஆ) முதலீடு செய்யப்பட்ட தொகை ஐந்து மில்லியன் ரூபாக்களை விஞ்சும் ஏதேனும் கருத்திட்டமொன்றில் -

   அத்துடன் எவ்விடயத்திலும் 2, 3 ஆம் 4 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமாகவுள்ள கருத்திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளதுமான பொறுப்பு முயற்சியொன்றென பொருள்படும்.

2. பொறுப்பு முயற்சியானது முன்னர் உள்ளதாயிருந்து ஏதேனும் தொழிலின் பிளவுபடுதலினால், இணைத்தலினால் அல்லது மீளமைப்பினால் உருவாக்கப்பட்டதொன்றாக இருத்தலாகாது.

3. கம்பனியானது குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில் அதனால் முதலீடு செய்யப்பட்ட தொகை தொடர்பில் ஆணையாளர் அதிபதியின் திருப்திக்கு சான்றினைக் கொடுத்துதவுதல்.

4. கம்பனியானது "குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்" அதனால் முதலீடு செய்யப்பட்ட தொகையை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ், வழங்கப்பட்ட வரிவிலக்கு காலப்பகுதியில் அல்லது பகுதியளவில் குறைத்தலோ அல்லது மீளெடுத்தலோ ஆகாது.

5. கம்பனியானது 2, 3 அல்லது 4 ஆம் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கத் தவறுமிடத்து அந்தக் கம்பனியின் இலாபங்களும் வருமானமும் பொறுப்பு முயற்சியானது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆரம்பித்த வரிமதிப் பாண்டின் தொடக்கத்திலிருந்து வருமான வரிக்கு உட்படுத்தப்படும்.

6. மேற்கூறப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக முதலீடு என்பது ஒப்புரவினால் அல்லது கடனினால் நிதிப்படுத்தப்பட்ட பொறுப்பு முயற்சியின் மொத்தச் செலவு எனப் பொருள்படும்.

**அட்டவணை**

*பெயர் குறிக்கப்பட்ட கருத்திட்டங்கள்*

- மட்பாண்டப் பொருட்களின் கண்ணாடிப் பொருட்களின் அல்லது பிற கனப்பொருள் அடிப்படையிலான பொருட்களின் உற்பத்தி.

- இறப்பர் அடிப்படையிலான பொருட்களின் உற்பத்தி.

- மென்ரக அல்லது மற்றும் கனரக எந்திரவியல் கைத்தொழில்களின் ஏதேனும் கருத்திட்டம்.

- உறை குளிரூட்டு போக்குவரத்துச் சேவைகள் அல்லது குளிர்பதன் அறை சேமிப்பு சேவைகள் வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கருத்திட்டம்.

- 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் 17 (3) பிரிவில் வரையறுக்கப்பட்டவாறான ஏற்றுமதி உற்பத்தி கிராமிய கம்பனி.

- ஏதேனும் கரைக்கப்பாற்பட்ட கம்பனியினை முகாமித்தல் அல்லது வெளிநாட்டில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் ஆதார அலுவலகமொன்றினைப் பேணுதல்.

3-601

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.